கட்சித் தலைவர்கள் மாநாட்டைக் கூட்டி, முடிவுகள் எடுத்து, இந்த மாமன்றத்தின் முன் வைக்க முடியும். இந்த நிலையில் தொடர்ந்து கேள்விகள் கேட்பது, வழக்கு நீதி மன்றத்தில் இருப்பதால், அவ்வளவு உசிதம் இல்லையென்று கருதுகிறேன்.

நாகையநல்லூர் வாய்க்கால் திட்டம்

* 345 வினு.—திரு. சீ. க. வடிவேலு : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டத்தில், நாகையநல்லூர் வாய்க்கால் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அத் திட்டம் எப்போது துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

தமிழ்நாட்டு கடற்கரையின் நீளம்

* 346 வினு.—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டின் மொத்த கடற்கரை நீளம் என்ன?

(இ) இந்து மாசமுத்திரம் தமிழ்நாட்டின் கடற்கரையில் எவ்வளவு நீளம் பரவியுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) 992 கி. மீட்டர்.

(இ) குமரிமுனைக்கு அப்பால் உள்ள கடல் இந்துமகா சமுத்திரம்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள், தமிழ் நாட்டின் கடற்கரை 992 கிலோ மீட்டர் என்று சொன்னுர்கள். இந்திய உப கண்டத்திலேயே தமிழ் மாநிலத்திற்குத்தான் இவ்வளவு நீண்ட கடற்கரை இருக்கிறது. ஆகவே, தமிழகத்தில் இந்தியாவின் கடற் துறை பாதுகாப்பு இருக்க வேண்டும். பதிலாக,